05.02.2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 24/2016**

அ.சா.3

**பெயர்.திரு.சண்முகம்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போன் மூலம் எனக்கு கெடார் காவல் நிலையத்திலிருந்து தகவல் கொடுத்தார்கள். நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு மூன்று பேரும் இருந்தார்கள். நான் சம்பவம் நடந்த அன்று காலையிலேயே அங்கு சென்று வீட்டேன். சம்பவத்தை நேரில் பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் இல்லை. நேரில் பார்த்து தான் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். ஆறுமுகம் என்ன புகார் கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. அவர் தனது புகாரில் சந்தேகத்தின் பேரில் தான் 1ம் எதீரிரி கொலை செய்திருப்பதாக கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவர் தனது புகாரில் கிழக்கு பக்கம் 3 பேரும், மேற்கு பக்கம் சிலரும் சம்பவ இடத்திலிருந்து ஓடினார்கள் என்று கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ராக்கி ரமேஉஷ் எனது அண்ணன் மகன். அவருக்கும் என் மகனுக்கும் சண்டை எதுவும் இல்லை. நல்ல உறவு இருந்தது. அவருடன் எனது மகன் நல்ல பழக்கம். அவர்மீது சுமார் 4,5 கொலை வழக்குகள் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தற்போது அவர் உயிருடன் இல்லை. அவருக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. ராக்கி ரமேசுடன் எனது மகன் பல கொலைகளில் உடந்தையாக இருந்துள்ளார் என்றும் அதில் பாதிக்கப்பட்ட எவரோ ஒருவர் தான் இந்த கொலைகளை செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் மகளை வைத்து வாழவில்லை என்ற முன்விரோதத்தாலும் , எதிரியின் மீதுள்ள கோவத்தினாலும்

**பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

மறுவிசாரணை இல்லை